**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுராந்தகம்.**

**அ.வ.எண்.61/2023**

**இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.மோகன் என்பவரால் முறையாக பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2024 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14ம் நாள் பதிவு செய்யப்பட்டது.**

| | |
|---|---|
| **பெயர். முனுசாமி** | **வயது** |
| **த.பெ(அ) க.பெ** | **மதம்** |
| **கிராமம்** | **வட்டம்** |

**<u>வா.சா.1முதல் விசாரணை</u>**

**14.08.2024**

இந்த வழக்கில் நான் 1ம் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை சத்திய பிராமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 20.07.1992 தேதியிட்ட கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 08.08.2000 தேதியிட்ட கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், வீட்டு வரி ரசீதுகள் (2 எண்ணிக்கை) அசல் வா.சா.ஆ.3 ஆகவும், குடிநீர் கட்டண ரசீதுகள் (2 எண்ணிக்கை) அசல் வா.சா.ஆ.4 ஆகவும், மின் கட்டண அட்டை அசல்

வா.சா.ஆ.5 ஆகவும், மாவட்ட ஆட்சியர் செங்கல்பட்டு அலுவலகத்தில் வழங்கிய ஒப்புகை சீட்டு (3 எண்ணிக்கை) அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் சரிப்பார்க்கப்பட்டது வா.சா.ஆ.7 ஆகவும், 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் சரிப்பார்க்கப்பட்டது வா.சா.ஆ.8 ஆகவும், 21.03.2023 தேதியிட்ட காவல் துறை வழங்கிய கணினி வழி ஒப்புகை சீட்டு வா.சா.ஆ.9 ஆகவும், குறியீடு செய்கிறேன். தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.